**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 293/2017** வா.சா.2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | முனுசாமி | **வயது** | : | 65 |
| **த.பெ** | : | விநாயகம் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | முனியன்குடிசை | **தொழில்** | : | விவசாயம் |

**<u>19.11.2025 – வா.சா. 2 குறுக்கு விசாரணை</u>**

1)2 ம் வாதி என் உறவுகாரரா என்றால் என் ஊரை சேர்ந்தவர். 2 ம் வாதியை எப்போதிலிருந்து தெரியும் என்றால் சுமாராக 30 வருடங்களாக தெரியும். தாவாசொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் முனியன்குடிசை ஊரில் உள்ளது. வழக்கு குறித்து பத்திரங்களை நான் வாதியிடமோ, பிரதிவாதியிடமோ வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்தின் சர்வே நெம்பர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 எக்கர் 50 செண்ட் விஸ்தீரணம் ஆகும். மேற்படி 1 ஏக்கர் 50 செண்ட் விஸ்தீரணம் வாதி கூறி எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். நான் இந்த நீதிமன்றத்தில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பதின் அடிப்படையில் வந்தேனா அல்லது சாட்சி சொல்ல வாதி என்னை அழைத்துவந்தாரா என்றால் வாதி என்னை அழைத்துவந்தார்.

2)2 ம் வாதி என்னிடம் வழக்கு குறித்து விவரம் கூறி அழைத்துவந்தாரா என்றால் விவரங்கள் அவர் கூறவில்லை. ஊரில் எதாவது பிரச்சனை நடந்தால் நான் தான் அந்த பிரச்சனைக்கு தலைமை ஏற்று நடத்துவேன் என்றால் இல்லை. ஊரில் நடக்கும் பிரச்சனைகளுக்கு கோர்ட்டில் சாட்சியம் அளிக்கும் பழக்கம் உண்டு என்றால் எனக்கு தெரிந்ததை வைத்து சாட்சியம் சொல்வேன். 1.2 பிரதிவாதிகளின் தந்தையை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர் பெயர் சின்னப்ப மந்திரி ஆகும். பிரதிவாதிகளின் தகப்பனாரை சுமார் 55 ஆண்டுகளாக தெரியும். எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து சின்னப்ப மந்திரி மற்றும் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை உழுது பயிரிட்டு வருகிறார்கள் என்றால் இல்லை.

3)பிரதிவாதிகள் பயிரிட்டு வரவில்லை என்று அடங்கல் ஆகியவை பார்த்து நான் தெரிந்துகொண்டேனா என்றால அடங்கல் நான் பார்க்கவில்லை. அடங்கல் ஆவணத்தை பார்க்காமல் ஒருசொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்று நான் கூறும் சாட்சி ஏற்றுகொள்ளகூடாது என்றால் சரியல்ல. வழக்கின் விவரங்கள் அனைத்தும் 2 ம் வாதி கூறிதான் எனக்கு தெரியும் என்றால் இல்லை, பிரச்சனை நடக்கும், அப்போது என்ன விசயம் என்று கேட்டு தெரிந்துகொண்டேன். எந்த தேதியில் மேற்படி பிரச்சனை நடந்தது என்றால் 1992 ம் வருடம்

பிரச்சனை ஆரம்பித்தது, 1999 வரை நடைபெற்றது. என்ன பிரச்சனை நடைபெற்றது என்றால் அருள் சொத்து பிரதிவாதிகள் ஆக்கிரமித்து செய்து அனுபவித்துவருவதால் பிரச்சனை நடந்தது.

4)மேற்படி பிரச்சனை குறித்து காவல்நிலையத்தில புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வேறு யாராவது புகார் கொடுத்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. காவல்நிலையத்திற்கு நான் போகவில்லை, 1999 ல் பிரதிவாதிகள் 2ம் வாதியை அடிக்க வந்தார்கள். இந்த வழக்கு சொத்து குறித்து நான் மணியகாரையும் பார்க்கவில்லை, ஆவணங்களையும் பார்க்கவில்லை, நான் முழுக்க முழுக்க 2ம் வாதி அழைத்ததின் பேரில் பொய்சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER Digitally signed by SALMA BASEER Date: 2025.11.20 13:27:11 +0530

District Munsif,
Polur.